# 4. உ.வே.சாமிநாதர், தெ.பொ.மீனாட்சி சுந்தரம், சி.இலக்குவனார் தமிழ்ப்பணி தொடர்பான செய்திகள்

பழகு

## தமிழ்த்தாத்தா உ.வே.சா

ஆறாம் வகுப்பு- உரைநடை

"ஐயா...ஐயா"

வெளியில் யாரோ அழைக்கும் குரல் கேட்டு வீட்டுக்குள் இருந்த முதியவர் வாசலுக்கு வந்தார். யாரோ உதவிகேட்டுத்தான் வந்திருப்பார் என்று நினைத்து வந்தவருக்கு வியப்பு. வாசலில் நின்றவரைப் பார்த்தால், அவர் பெரிய மனிதராகவும், நல்ல படிப்பாளியாகவும் தெரிந்தார். அவர் முகத்தில் அப்படியொரு தெளிவு இருந்தது.

"என்ன வேண்டும்?" என்று வீட்டுக்காரர் கேட்டார்.

"தங்கள் வீட்டில் பழைய ஓலைச்சுவடிகள் நிறைய இருப்பதாகக் கேள்விப்பட்டு வந்தேன். அவற்றில், தமிழ் மொழியின் சிறந்த இலக்கியங்கள் இருக்கலாம். ஓலைச்சுவடியில் உள்ளனவற்றை எல்லாம் எழுதிப் புத்தகமாக அச்சிட்டு வருகிறேன். உங்கள் வீட்டில் உள்ள சுவடிகளைக் கொடுத்தால், அவற்றைப் பார்த்து எழுதிவிட்டு திருப்பித் தந்துவிடுவேன். இந்த உதவியை மறுக்காமல் தாங்கள் செய்தல் வேண்டும்" என்று வந்த பெரியவர் கூறினார்.

இதனைக் கேட்ட வீட்டுக்காரருக்குச் சினம் வந்துவிட்டது.

"நாளை ஆடிப்பெருக்கு. விடியற்காலையில் ஆற்றில் விடுவதற்காக வீட்டில் கொஞ்சம் ஓலைச்சுவடிகள் வைத்திருக்கிறேன். அது பொறுக்கவில்லையா உமக்கு?" என்று கத்தினார்.

"ஓலைச்சுவடிகளைப் படிக்கவேண்டுமே தவிர, அவற்றை ஏன் ஆற்றில் விடவேண்டும்...?" என்று வந்தவர் கேட்டார்.

வீட்டுக்காரர் மேலும் சினம் கொண்டார். "அஃது உமக்குத் தேவையில்லாதது. ஆடிப்பெருக்கு நாளில் சுவடிகளை ஆற்றில் விட்டால் புண்ணியம் என்பது சாத்திரம். அவற்றை எல்லாம் கொடுக்கக்கூடாது" எனக் கூறி வந்தவரை விரட்டினார்.

பெரியவர், வீட்டுக்காரரிடம் எவ்வளவோ கெஞ்சிக்கேட்டும் அவர் ஓலைச்சுவடிகளைத் தர ஒத்துக்கொள்ளவில்லை. வந்தவரோ அதற்காக மனம் தளரவில்லை; அந்த ஊரைவிட்டும் செல்லவில்லை. அந்த வீட்டுக்காரருக்குத் தெரியாமல் அன்றிரவு வேறொரு வீட்டுத்திண்ணையில் படுத்துக்கொண்டார். குளிரும் பனியும் அவரை வாட்டின.

விடியற்காலையில் கோழி கூவியதும் அந்த வீட்டுக்காரர் ஓலைச்சுவடிகளுடன் ஆற்றுக்குச் செல்வதனைப் பார்த்தார் அந்தப் பெரியவர்; அவரைப் பின்தொடர்ந்து மறைந்து மறைந்து சென்று, ஒரு புதருக்குப் பின்னால் ஒளிந்துகொண்டு நடப்பதனை எல்லாம் பார்த்துக்கொண்டு இருந்தார்.

வீட்டுக்காரர் நீராடியபின், ஓலைச்சுவடிகளை ஆற்றில்விட்டுச் சென்றார். அவர் விட்டுச்சென்ற ஓலைச்சுவடிகளை அப்பெரியவர் தேடி எடுத்தார். அவற்றில் இருந்த ஈரத்தைத் தன் வேட்டியால் துடைத்தார். அங்கேயே சுவடிகளை வாசிக்கத் தொடங்கினார். அவர் கண்களில் கண்ணீர் பெருகியது. அவர் தேடித்தேடி அலைந்த அருந்தமிழ் இலக்கியங்கள் சில அச்சுவடிகளில் இருந்தன. (இந்த நிகழ்வு இன்றைய ஈரோடு மாவட்டத்தில் உள்ள கொடுமுடி என்னும் ஊரில் நடைபெற்றது.) அந்தப் பெரியவரே உ.வே.சாமிநாதர்.

அந்தக் காலத்தில் தாளோ எழுதுகோலோ இல்லை. பனை ஓலையைப் பக்குவப்படுத்தி அதில் எழுத்தாணி கொண்டு எழுதுவர். அவ்வாறு எழுதப்பட்ட ஓலைக்கு 'ஓலைச்சுவடி' என்று பெயர். அக்காலத்தில் இலக்கியங்களும் இலக்கணங்களும் ஓலைச்சுவடிகளில்தான் எழுதப்பட்டன. ஆணியால் ஓலையில் எழுதும்போது ஓலை கிழியாமல் எழுதுதல் வேண்டும். அதனால், ஓலைச்சுவடி எழுத்துகளில் புள்ளி இருக்காது; ஒற்றைக்கொம்பு, இரட்டைக்கொம்பு வேறுபாடு இருக்காது. பேரன் என்பதனைப் பெரன என்றும் வாசிக்கலாம், பேரன என்றும் வாசிக்கலாம். முன்னும் பின்னும் உள்ள வரிகளை வைத்துப் பொருள் கொள்ளுதல் வேண்டும்.

பிழை இல்லாமல் எழுதவேண்டும் என்பதற்காக, உ.வே.சா. வெவ்வேறு சுவடிகளை வைத்துப் பலமுறை ஒப்பிட்டுப் பார்த்த பின்னரே, அவற்றை அச்சுக்கு அனுப்பினார். அவ்வாறு எழுதப்பட்ட சுவடிகளை வாசித்து, நமக்காகத் தாளில் எழுதி, அச்சிட்டுப் புத்தகமாக வழங்கினார் உ.வே.சாமிநாதர். நாம் அவ்விலக்கியங்களைப் படிப்பதற்காக அவர் ஓய்வின்றி உழைத்தார். அதனால், அவரைத் தமிழ்த்தாத்தா உ.வே.சா. என்று அன்போடும் உரிமையோடும் நாம் அழைக்கிறோம்.

'குறிஞ்சிப்பாட்டு' என்னும் சுவடியை அச்சில் பதிப்பிப்பதற்காக எழுதிக் கொண்டிருந்தார்.

அச்சுவடியில் தொண்ணூற்று ஒன்பது வகையான பூக்களின் பெயர்கள் இருந்தன. அவற்றுள், தொண்ணூற்று ஆறு பூக்களுடைய பெயர்கள் மட்டுமே தெளிவாக இருந்தன; மூன்று பூக்களின் பெயர்கள் தெளிவாக இல்லை. ஆனால், மூன்றே மூன்று பூக்கள்தானே தெரியவில்லை என அவர் விட்டுவிடவில்லை. அந்தப் பூக்களின் பெயர்கள் தெளிவாக உள்ள சுவடி யாரிடமாவது இருக்காதா என்று மறுபடியும் ஊர்ஊராக, வீடுவீடாகத் தேடிச் சென்றார். (குறிஞ்சிப்பாட்டு - பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று; இதன் ஆசிரியர் கபிலர்) பல மாதங்கள் கழித்து, அவர் தேடிய பூக்களின் பெயர்கள் உள்ள சுவடி ஒன்று கிடைத்தது. அதன் பிறகே அந்நூலை அச்சுக்குக் கொடுத்தார். எதனையும் அரைகுறையாகச் செய்ய விரும்பாத சுறுசுறுப்பான அந்தத் தாத்தா தம் வாழ்நாள் முழுவதும் ஓய்வில்லாமல் பதிப்புப் பணியை மேற்கொண்டார்.

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

குறிஞ்சிப்பாட்டு என்னும் நூலில் எத்தனை வகையான பூக்களின் பெயர்கள் உள்ளன? (SABT-2017)
அ) 79 ஆ) 99
இ) 119 ஈ) 9

தொண்ணூற்று ஒன்பது வகையான பூக்களின் பெயர்கள் இடம் பெறும் நூல் (SGHGT-2017)
அ) பரிபாடல் ஆ) கலிப்பாடல்
இ) முல்லைப் பாட்டு ஈ) குறிஞ்சிப் பாட்டு

தொண்ணூற்று ஒன்பது வகையான பூக்களின் பெயர்கள் இடம்பெறும் நூல் எது? (JSTT3 - 2014)
அ) குறிஞ்சிப்பாட்டு ஆ) முல்லைப்பாட்டு
இ) கலிப்பாடல் ஈ) பரிபாடல்

ஓலைச்சுவடிகள் பாதுகாக்கப்படும் சில இடங்கள்
- கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை
- அரசு ஆவணக் காப்பகம், சென்னை.
- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
- சரசுவதி நூலகம், தஞ்சாவூர்.

அவர் பிறந்த ஊர் திருவாரூர் மாவட்டத்தில் உள்ள உத்தமதானபுரம். அவருடைய இயற்பெயர் வேங்கடரத்தினம். அவருடைய ஆசிரியரின் பெயர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம். அவருடைய ஆசிரியர் அவருக்கு வைத்த பெயர் சாமிநாதன். அதனால் அவர், உத்தமதானபுரம் வேங்கடசுப்புவின் மகனார் சாமிநாதன் என்பதன் சுருக்கமாகவே உ.வே.சா. என்று அழைக்கப்பட்டார். 19.02.1855 ஆம் ஆண்டு பிறந்த அவர், 28.04.1942 ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

தம் வாழ்க்கை வரலாற்றை ஆனந்தவிகடன் இதழில் தொடராக எழுதினார். அஃது 'என் சரிதம்' என்னும் பெயரில் நூலாக வெளிவந்தது.

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

உ.வே.சா. அவர்கள் தனது வாழ்க்கை வரலாற்றைத் தொடராக எழுதிய இதழ் எது? (CCSE2T/2024)
அ) துக்ளக் ஆ) குமுதம்
இ) கல்கண்டு ஈ) ஆனந்த விகடன்
உ) விடை தெரியவில்லை

உ.வே.சா. 'தன் சரிதம்' என்னும் வரலாற்று நூலை எந்த இதழில் தொடராக எழுதினார்? (EO3GT-2019)
அ) சுதேசமித்திரன் ஆ) ஆனந்த விகடன்
இ) தினமணி ஈ) இந்தியா

தமிழ் அறிஞர் டாக்டர் உ.வே.சா. அவர்களின் பெயரின் விரிவாக்கம் என்ன? (JICGT-2019)
அ) உத்தமபுரம் வேங்கடனின் மகனார் சாமிநாதன்
ஆ) உத்தமதானபுரம் வேங்கடசுப்புவின் மகனார் சாமிநாதன்
இ) உத்தமபுரம் வேங்கடநாதனின் மகனார் சாமிநாதன்
ஈ) உத்தமதானபுரம் வேங்கடநாதனின் மகனார் சாமிநாதன்

ஆனந்த விகடன் இதழில் தம் வாழ்க்கை வரலாற்றைத் தொடராக எழுதியவர் (EO4GT-2017)
அ) உ.வே.சாமிநாதன்
ஆ) ம.பொ.சிவஞானம்
இ) திரு.வி.கல்யாண சுந்தரனார்
ஈ) தாராபாரதி

'சாமிநாதன்' என்று ஆசிரியரால் பெயரிடப்பட்டவர் (SABT-2017)
அ) அம்பேத்கர் ஆ) காமராசர்
இ) உ.வே.சா ஈ) அண்ணா

உ.வே.சாவின் வாழ்க்கை வரலாறு தொடராக வந்த இதழ் (SABT-2017)
அ) இந்தியா ஆ) குயில்
இ) ஆனந்தவிகடன் ஈ) நவசக்தி

தம் வாழ்க்கை வரலாற்றை 'என் சரிதம்' என்னும் பெயரில் ஆனந்த விகடன் இதழில் தொடராக எழுதியவர் யார்? (HC2GST16)
அ) உ.வே.சா. ஆ) மறைமலையடிகள்
இ) காந்தியடிகள் ஈ) நேரு

| உ.வே.சா. பதிப்பித்த நூல்கள் | |
|---|---|
| எட்டுத்தொகை | 8 |
| பத்துப்பாட்டு | 10 |
| சீவகசிந்தாமணி | 1 |
| சிலப்பதிகாரம் | 1 |
| மணிமேகலை | 1 |
| புராணங்கள் | 12 |
| உலா | 9 |
| கோவை | 6 |
| தூது | 6 |
| வெண்பா நூல்கள் | 13 |

| | |
|---|---|
| அந்தாதி | 3 |
| பரணி | 2 |
| மும்மணிக்கோவை | 2 |
| இரட்டைமணிமாலை | 2 |
| பிற பிரபந்தங்கள் | 4 |

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

பத்துப்பாட்டு எட்டுத்தொகை ஆகிய இரண்டு தொகுதிகளையும் அச்சிட்டு அளித்தவர் (CCS4T-2022)

அ) மெய்யப்பர் ஆ) உ.வே.சாமிநாதனார்
இ) இலக்குவனார் ஈ) மீனாட்சி சுந்தரனார்
உ) விடை தெரியவில்லை

பொருந்தாததை எழுதுக. (SABT-2017)
உ.வே.சா பதிப்பித்த நூல்கள்

அ) உலா ஆ) கோவை
இ) பிள்ளைத்தமிழ் ஈ) பரணி

### சிறப்புக் குறிப்புகள்

- உ.வே.சா. அவர்களின் பெயரால் 1942 இல் நிறுவப்பட்ட டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம் இன்றும் சென்னையில் உள்ள பெசன்ட் நகரில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.
- உ.வே.சா. அவர்களின் தமிழ்ப் பணிகளை வெளிநாட்டு அறிஞர்களான ஜி.யு.போப், சூலியல் வின்சோன் ஆகியோர் பெரிதும் பாராட்டியுள்ளனர்.
- நடுவணரசு, உ.வே.சா. அவர்களின் தமிழ்த்தொண்டினைப் பெருமைப்படுத்தும் வகையில் 2006 ஆம் ஆண்டு அஞ்சல்தலை வெளியிட்டுச் சிறப்பித்துள்ளது.
- உ.வே.சா. நினைவு இல்லம், உத்தமதானபுரத்தில் அமைந்துள்ளது.

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

சரியான விடையைத் தேர்ந்தெடு: (CCS2T-2022)
கீழ்க்கண்டவற்றுள் உ.வே.சா. பற்றிய சரியான தொடரைத் தேர்ந்தெடு.

1. உ.வே.சாவின் இயற்பெயர் வேங்கடரத்தினம், இவரின் ஆசிரியர் பெயர் மீனாட்சி சுந்தரம்.
2. குறிஞ்சிப்பாட்டு என்னும் ஓலைச் சுவடியை அச்சில் பதிப்பித்தார்.
3. உ.வே.சா.மூன்றாம் தமிழ்ச்சங்கத்தின் தலைவர்.

அ) 1 மட்டும் ஆ) 1 மற்றும் 2 சரி
இ) 1 மற்றும் 3 சரி ஈ) 2 மற்றும் 3 சரி
உ) விடை தெரியவில்லை

"சூலியல் வின்சோன்" பாராட்டிய தமிழறிஞர் (CCSFT-2018)

அ) திரு.வி.க ஆ) மறைமலையடிகள்
இ) உ.வே.சா ஈ) கவிமணி

உ.வே.சா. அவர்களின் தமிழ்ப் பணியைப் பாராட்டிய வெளிநாட்டு அறிஞர்கள் (EO4GT-2017)

அ) கால்டுவெல் - கெல்லட்
ஆ) சுமில் கவலபில் - மாக்சுமுல்லர்
இ) ஜி.யு.போப் - சூலியல் வின்சோன்
ஈ) ஹிப்பாலஸ் - பிளினி

உ.வே.சாவின் தமிழ்ப்பணியைப் பாராட்டிய மேலைநாட்டவர் (SABT-2017)

அ) கோலரிட்ஜ் ஆ) வோர்ட்ஸ்வொர்த்
இ) கீட்ஸ் ஈ) சூலியல் வின்சோன்

நடுவண் அரசு, உ.வே.சா. அவர்களின் தமிழ்த்தொண்டினைப் பாராட்டி அஞ்சல் தலை வெளியிட்ட ஆண்டு எது? (JGT-19)

அ) 2006 ஆ) 2007
இ) 2008 ஈ) 2010

***

யார் காப்பார் என்று தமிழன்னை ஏங்கிய போது நான் காப்பேன் என்று எழுந்தார் ஒருவர் அவர்தாம். உ.வே.சாமிநாதர். பின்னாளில் அவரே அனைவராலும் தமிழ்த்தாத்தா என்று அழைக்கப்பட்டார். இத்தகைய மாணவரை உருவாக்கிய பெருமை அவர்தம் ஆசிரியரான மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனாரையே சாரும்.

### உ.வே.சாமிநாதர்

**புதுசு**

## தமிழ்நாட்டில் காந்தி

ஆறாம் வகுப்பு- உரைநடை

1937 ஆம் ஆண்டு சென்னையில் இலக்கிய மாநாடு ஒன்று நடைபெற்றது. அம்மாநாட்டுக்குக் காந்தியடிகள் தலைமை வகித்தார். உ.வே.சாமிநாதர் வரவேற்புக்குழுத் தலைவராக இருந்தார். உ.வே.சாமிநாதரின் உரையைக் கேட்ட காந்தியடிகள் மகிழ்ந்தார். "இந்தப் பெரியவரின் அடி நிழலில் இருந்து தமிழ் கற்க வேண்டும் என்னும் ஆவல் உண்டாகிறது" என்று கூறினார் காந்தியடிகள்.

**TNPSC Old Questions**
**கட்டாயத் தமிழ்**

"இந்தப் பெரியவரின் அடி நிழலில் இருந்து தமிழ் கற்க வேண்டும் என்னும் ஆவல் உண்டாகிறது" என்றார் காந்தியடிகள். காந்தியடிகள் குறிப்பிடும் பெரியவர் ______ ஆவார். (AOGS/2023)

அ) உ.வே. சாமிநாதர்
ஆ) கால்டுவெல்
இ) கவிமணி தேசிக விநாயகர்
ஈ) வீரமாமுனிவர்

## புத்தகப் பயிற்சி வினாக்கள்

உ.வே.சா. பிறந்த ஊர்

விடை : உத்தமதானபுரம்

உ.வே.சா.அவர்களை நாம் ________ என அன்போடு உரிமையோடும் அழைக்கின்றோம்.

விடை : தமிழ்த்தாத்தா

உ.வே.சா. அவர்களின் நம்பிக்கைக்குக் காரணம் என்ன?

விடை : அவருடைய ஆர்வம்

உ.வே.சா.வின் வாழ்க்கை வரலாற்று நூலின் பெயர்

விடை : என் சரிதம்

உ.வே.சா.தம் வாழ்நாள் முழுவதும் ஓய்வில்லாமல் ______ பணியை மேற்கொண்டார்.

விடை : பதிப்புப்

ஓலைச்சுவடிகளைத் தேடி வந்த பெரியவர் ________.

விடை : உ.வே.சாமிநாதர்

புதுசு

## உ.வே.சாமிநாதர்

மேல்நிலை இரண்டாம் ஆண்டு - உரைநடை

- 'தமிழ்த் தாத்தா' என அழைக்கப்பெற்ற உ.வே.சா இணையற்ற ஆசிரியர்; புலமைப் பெருங்கடல்; சிறந்த எழுத்தாளர்; பதிப்பாசிரியர்.
- பழந்தமிழ் இலக்கியங்களைத் தேடித்தேடி அச்சில் பதிப்பிக்க அரும்பாடுபட்டவர்.
- 'மகாமகோபாத்தியாய', 'திராவிட வித்தியா பூஷணம்', 'தாக்ஷிணாத்திய கலாநிதி' உள்ளிட்ட பட்டங்களைப் பெற்றுள்ளார்.
- கும்பகோணம் அரசு கலைக்கல்லூரியிலும் சென்னை மாநிலக் கல்லூரியிலும் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றியவர்.
- 1932 இல் சென்னைப் பல்கலைக்கழகத்தினால் 'டாக்டர்' பட்டம் பெற்ற பெருமைக்குரியவர்.
- அவரது திருவுருவச்சிலை சென்னை மாநிலக் கல்லூரியில் வங்கக்கடலை நோக்கி நிற்கும் வண்ணம் நிறுவப்பட்டுள்ளது.
- சென்னையில் திருவான்மியூரில் இவர் பெயரால் உ.வே.சா நூலகம் அமைந்துள்ளது.
- 'பண்டைக் காலத்துப் பள்ளிக்கூடங்கள்' எனும் கட்டுரை 'உயிர்மீட்சி' என்னும் தலைப்பில் உ.வே.சாவின் இலக்கியத் தொகுக்கப்பட்ட கட்டுரைகளில் இடம்பெற்றுள்ளது.

TNPSC Old Questions
பொதுத்தமிழ்

'புலமைப் பெருங்கடல்' என அழைக்கப் பெற்றவர். (CCSE4GT/2024)

அ) உ.வே.சாமிநாதர்
ஆ) மு.வரதராசனார்
இ) வ.சுப.மாணிக்கனார்
ஈ) தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்
உ) விடை தெரியவில்லை

புதுசு

## பண்டைய காலத்துப் பள்ளிக்கூடங்கள்

- உ.வே. சாமிநாதர்

மேல்நிலை இரண்டாம் ஆண்டு - உரைநடை

கல்வியும் அதன் நோக்கமும் கல்விக்கூட அமைப்பும் கற்பிக்கும் முறைகளும் காலந்தோறும் இலக்கியங்களில் தடங்களாகப் பதிவு பெற்றிருக்கின்றன. அவ்வகையில் அக்கால அறிஞர்கள் 19 ஆம் நூற்றாண்டின் திண்ணைப் பள்ளிக்கூட விளைச்சல்கள். அந்நாளைய கற்பித்தல் முறைகளைப் பழையன என்று புறந்தள்ளிவிடாமல், தேவையானவற்றைத் தேர்ந்து பயன்படுத்தினால் அவை இன்றைய கல்விக்கு ஏற்ற உரமாக ஆகத்தக்கவை.

(சென்னை புரசைவாக்கம் சர்.எம்.சி.டி. முத்தையா உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் சங்கத்தின் முதற் சொற்பொழிவாக 20.07.1936 இல் நிகழ்த்தப்பட்டு 16.08.1936 சுதேசமித்திரன் வார இதழில் வெளியான கட்டுரை.)

காலநிலை மாறுபாடு அடைய அடைய ஜனங்களுடைய பழக்கங்களும் மாறுதலடைகின்றன. இக்காலத்துப் பள்ளிக்கூடங்களில் இக்கால வாழ்க்கைக்கேற்ற முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பழைய காலத்துப் பாடசாலைகளில் வழங்கிவந்த முறைகளோ வேறுவகை. நம்முடைய நாட்டில் மிகப் பழைய காலத்தில் உபாத்தியாயருடைய வீடே பள்ளிக்கூடமாக இருந்தது. அதைக் குருகுலம் என்பார்கள். கணக்காயரென்பது உபாத்தியாயருக்குப் பெயர். கணக்கு என்பது நூலின் பெயர்.

**திண்ணைப் பள்ளிக்கூடங்களும் அண்ணாவிகளும்**

- மில்டனின் சுவர்க்க நீக்கத்தைத் தமிழில் மொழிபெயர்த்தவரும் உயிரின மருத்துவருமான வெள்ளக்கால் ப.சுப்பிரமணியனார் திருநெல்வேலி தெற்குத் தெரு கணபதியார் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் 4 வருடங்கள் படித்திருக்கிறார்.
- வரலாற்றாய்வாளரும் தமிழறிஞருமான டாக்டர் மா. இராசமாணிக்கனார் மௌனகுருவிடம் படித்திருக்கிறார்.
- நற்றிணை நூலின் உரையாசிரியர் பின்னத்தூர் நாராயணசாமி, பின்னத்தூர் அருகே உள்ள கிருஷ்ணாபுரம் முத்துராம பாரதி திண்ணைப் பள்ளிக்கூடத்தில் இலவசமாகப் படித்தார்.
- சுப்பிரமணிய பாரதியின் நண்பரும் வழக்குரைஞரும்

தமிழறிஞருமான நாவலர் சோமசுந்தர பாரதியார் எட்டயபுரம் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்தவர் ஆவார்.

- சிலப்பதிகார உரையாசிரியர் வேங்கடசாமி வல்லம் குருசாமி வாத்தியார் திண்ணைப் பள்ளியிலும் மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருந்த டாக்டர் வ.சுப. மாணிக்கம் மகிபாலன் பட்டி நடேசனார் திண்ணைப் பள்ளிக்கூடத்திலும் படித்தனர்.

**மன்றங்கள்**

ஊர்தோறும் பொதுவான இடத்தில் ஒரு பெரிய மரத்தினடியே மேடையொன்று அமைக்கப்பட்டிருக்கும். அதனை மன்றமென்றும் அம்பலமென்றும் கூறுவர். மன்றமென்பது மரத்தடியில் உள்ள திண்ணையே; அதுவே பிறகு திண்ணைப் பள்ளிக்கூடமாக மாறியதென்று தோன்றுகிறது.

இயற்கையாக உள்ள மரத்தடியிலும், வனங்களிலும் சென்று பழைய காலத்து மாணாக்கர்கள் கல்வி கற்றனர். இப்பொழுது பள்ளிக்கூடம் இருக்குமிடத்தில் செடி கொடிகளை வருவித்து வனம் உண்டாக்குகிறோம். நாடகத்தில் வனங்களைத் திரையில் எழுதித்தொங்கவிடுவது போலப் பள்ளிக்கூடங்களிலும் சட்டியிலும் வாயில்களிலும் செடி கொடிகளை வளர்க்கிறோம்.

**பள்ளிகள்**

மரத்தடியில் இருந்த பள்ளிக்கூடங்கள் நாளடைவில் சிறு குடிசைகளாக மாறின. பல இடங்களிலே மடங்களிற் பாடசாலைகள் உண்டாயின. பள்ளியெனும் சொல் ஜைன மடங்களுக்கும் பாடசாலைகளுக்கும் பொதுவான பெயர். பாடசாலைகள் வேறு, மடங்கள் வேறு என்ற வேறுபாடின்றி இரண்டும் ஒன்றாகவே கருதப்பட்டமையின் பள்ளியென்னும் பெயர் இரண்டிற்கும் பொதுவாக வழங்கியதென்று தோற்றுகின்றது.

**வித்தியாரம்பம்**

முதன்முதலில் ஐந்தாம் பிராயத்தில் வித்தியாப்பியாசம் செய்யும்பொழுது தாய் தந்தையர் பிள்ளைகளை ஆசிரியர்களிடம் அடைக்கலமாகக் கொடுத்து வந்தார்கள்.

பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்தில் வைக்கும் காலம் ஒரு பெரிய விசேட நாளாகக் கொண்டாடப் பெறும். ஏட்டின் மீது மஞ்சட் பூசிப் பூசித்துப் பையனிடம் கொடுத்து வாசிக்கச் செய்வார்கள். உபாத்தியாயர் நெடுங்கணக்கைச் சொல்லிக்கொடுக்க, மாணாக்கன் அதனைப் பின்பற்றிச் சொல்லுவான். உபாத்தியாயர் ஒன்றைச் சொல்ல அதை மாணாக்கர்கள் பலரும் சேர்ந்து சொல்வதை 'முறை வைப்ப'தென்று கூறுவார்கள். உபாத்தியாயருக்குப் பிரதியாகச் சில சமயங்களிற் சட்டாம்பிள்ளை முறை வைப்பதுண்டு.

**மையாடல்**

சுவடிகளிலுள்ள எழுத்துக்கள் செவ்வனே தெரிவதற்காகச் சுவடியில் வசம்பு, மஞ்சள், மணத்தக்காளியிலைச்சாறு அல்லது ஊமத்தையிலைச்சாறு, மாவிலைக்கரி, தர்ப்பைக்கரி முதலியவற்றைக் கூட்டிச் செய்த மையை அதில் தடவுவார்கள். அந்த மை எழுத்துக்களை விளக்கமாகக் காட்டுவதோடு கண்ணுக்கும் குளிர்ச்சியைத் தரும். இங்ஙனம் மை தடவிப் புத்தகத்தை வாசிக்கத் தொடங்குவதனால் அக்ஷராப்பியாசத்தை 'மையாடல் விழா' என்று சொல்வார்கள்.

'ஐயாண் டெய்தி மையாடி அறிந்தார் கலைகள்' என்பது சிந்தாமணி.

பிள்ளைகள் முதலில் மணலில் எழுதிப் பழகுவார்கள். அதனால் அவர்களுடைய எழுத்துக்கள் வரிசையாகவும் நன்றாகவும் அமையும். உபாத்தியாயர் முதலில் தரையில் எழுத அதன் மேல் பிள்ளைகள் விளம்புவார்கள். பிறகு தாமே எழுதி எழுதிப் பழகுவார்கள்.

**கையெழுத்து**

"கொம்புசுழி கோணாமல் கொண்ட பந்தி சாயாமல்
அம்புபோல் கால்கள் அசையாமல் - தம்பி எழுதினால்
நன்மை யுண்டு"

என்று வரும் பழைய வெண்பா ஒன்று உண்டு. எழுத்துக்கள் ஒன்றோடொன்று படாமல் வரிகோணாமல் பழைய காலத்தில் எழுதி வந்தார்கள். பழைய ஏட்டுச்சுவடிகளைப் பார்த்தால் இது விளங்கும்.

**எழுத்தின் வடிவம்**

எழுத்துக்களின் உருவங்கள் பல காலமாக மாறாமல் இருந்து வந்தன. புள்ளி, கால், கொம்பு, விலங்கு முதலியவை வரியெழுத்தின் உறுப்புக்கள். பெரியோர்கள் பழக்கி வந்த பழக்கத்தால் பல நூறு வருஷங்களாகியும் எழுதும் வழக்கத்தில் பெரிய மாறுபாடுகள் ஏற்படவில்லை.

**மனனப் பயிற்சி**

அக்காலத்துப் பாட முறைக்கும் இக்காலத்துப்பாட முறைக்கும் பெரிய வேறுபாடு உண்டு. அடிப்படையான நூல்களெல்லாம் பிள்ளைகளுக்கு மன்னமாக இருக்கும். தமிழில் நிகண்டு, நன்னூல், காரிகை, தண்டியலங்காரம், நீதி நூல்கள் முதலியன பாடமாக இருக்கும். கணிதத்தில் கீழ்வாயிலக்கம், மேல்வாயிலக்கம், குழிமாற்று முதலிய பலவகை வாய்பாடுகள் பாடமாக வேண்டும். 'தலைகீழ்ப்பாடம்' என்று சொல்வதை அம்முறைகளில் காணலாம்.

சிறுவர்கள் படிக்கும் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் என்பவை அகராதி வரிசையில் அமைந்தமை அவர்களுடைய ஞாபகத்தில் அவை பதிவதன் பொருட்டேயாகும். இப்படியே அந்தாதி முறையைக் கொண்டும் எதுகை மோனைகளைக் கொண்டும் செய்யுட்களை ஞாபகப்படுத்திக் கொள்வார்கள்.

பள்ளிக்கூடப் பிள்ளைகள் தமக்குத் தெரிந்த பாடங்களை அடிக்கடி சிந்தித்து வருவார்கள். பலர் ஒருங்குகூடிக் கேள்விகள் கேட்டும் விடை கூறியும் கற்று வருவார்கள். இதனால் அவர்களுடைய கல்வி எந்த வேளையிலும் தடையின்றிப் பயன்பட்டது.

## சுவடிகள்

இளம் பிள்ளைகளுக்கு உபாத்தியாயர் ஓலையை வாரி ஒழுங்காக நறுக்கித் துளையிட்டுக் கயிறு கோத்துத் தருவார். ஒரு துளையிடுவதும் இரண்டு துளையிடுவதும் உண்டு. மற்றப் பிள்ளைகள் தாங்களே செய்து கொள்ளுவார்கள். பனையேடு, சீதாளபத்திரம் முதலியவற்றில் எழுதுவது வழக்கம். மேலே சட்டமாகப் பனைமட்டையின் காம்பை நறுக்கிக் கோர்ப்பார்கள்; மரச்சட்டங்களையும் அமைப்பார்கள்; செப்புத் தகட்டாலும் சட்டஞ் செய்து கோர்ப்பார்கள். அந்தச் சட்டங்களின் மேல் வர்ணமையினாற் பல வகையான சித்திரங்கள் எழுதுவதுண்டு. இரட்டைத் துளையுள்ள ஏடுகளில் ஒரு துளையில் செப்புக் கம்பி அல்லது மூங்கிற் குச்சியைச் செருகிக் கட்டுவார்கள். அதற்கு 'நாராசம்' என்று பெயர்.

சுவடியைக் கோக்கும் கயிற்றின் ஒரு தலைப்பில் தடையாக, பனையோலையை ஈர்க்கோடு கிளிமூக்குப் போலக் கத்தரித்து அமைப்பார்கள். அதற்குக் கிளிமூக்கென்று பெயர். இப்போது அச்சுப் புத்தகங்களின் அளவில் எவ்வளவு வேறுபாடுகள் உண்டோ அவ்வளவு பனையோலைச் சுவடிகளிலும் உண்டு.

### கற்பிக்கப்பட்ட நூல்கள்

- கதைப்பாடல்கள், மாணவர்களுக்குக் கற்பித்த நூற்களைப் பட்டியலிடுகின்றன. இவை பெரும்பாலும் நீதி நூல்கள் (ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி). நிகண்டுகளை மனப்பாடம் செய்யும் மாணவனுக்கு மதிப்பிருந்தது.
- வியாபாரம் செய்வதற்கும் கோவிலில் பணி செய்வதற்கும் ஏற்றவாறமைத்த கணிதமுறை கட்டாயமாகக் கற்பிக்கப்பட்டதைக் கதைப்பாடல்கள் குறிப்பிடுகின்றன.
- கீழ்வாயிலக்கம், மேல்வாயிலக்கம், குழிமாற்று, நெல் இலக்கம் முதலிய வாய்பாடுகளைக் கட்டாயம் மனப்பாடம் செய்யவேண்டும். இதற்காக பிரபவாதி சுவடி என்ற புத்தகம் கூட இருந்தது.

## எழுத்தாணிகள்

ஓலையில் எழுதுவதற்குரிய எழுத்தாணியில் பல பேதங்கள் உண்டு. எழுத்தாணியை ஊசியென்றும் கூறுவதுண்டு. மடக்கெழுத்தாணி, வாரெழுத்தாணி, குண்டெழுத்தாணி என்பன எழுத்தாணியின் வகைகள். ஒரு பக்கம் வாருவதற்குக் கத்தியும் மறுபக்கம் எழுதுவதற்கு எழுத்தாணியும் அமைந்ததைப் பார்த்தே பேனாக்கத்தி என்ற பெயர் வந்ததென்று தோற்றுகின்றது. ஒரு பக்கத்தில் இரண்டு கத்தியும் ஒரு பக்கம் இரண்டு எழுத்தாணியும் உள்ள மடக்கெழுத்தாணிகளும் இருந்தன.

## ஏடெழுதும் வழக்கம்

ஒரு பக்கத்தில் மிக நுண்ணிய எழுத்துக்களாக இருபது முப்பது வரி வரையில் எழுதுவதற்குரிய மெல்லிய எழுத்தாணிகள் இருந்தன. நாம் இக்காலத்தில் காகிதத்தில் எழுதுவதைப் போன்ற வேகத்தோடே ஏட்டில் எழுதுவதுண்டு. மாணாக்கர்களுக்கு எழுதும் பழக்கம் நன்றாக உண்டாகவேண்டுமென்று ஆசிரியர்கள் ஒவ்வொரு நாளும் அவர்களைத் தனித்தனியே ஏடுகளில் தாம் மேலே எழுதி அதைப்போல் எழுதிவாச் சொல்வார்கள். இதற்குச சட்டமென்று பெயர்.

சுவடிகளை வைப்பதற்கும் எடுத்துச் செல்வதற்கும் உபயோகப்படும் கருவிக்குத் தூக்கு என்று பெயர். அதனை அசை என்றும் சொல்வதுண்டு.

## அன்பினால் அடக்குதல்

முற்காலத்தில் கொடிய தண்டனைகள் இல்லை. ஆசிரியர்கள் மாணாக்கர்களை அன்பினால் வழிப்படுத்தி வந்தார்கள். அவர்கள்பால் இருந்த மரியாதை மாணாக்கர்களுக்குப் பயத்தை உண்டாக்கியது. பிழைகளை மறந்தும் புரியாத நிலையில் அவர்கள் இருந்தனர்.

## வாதம் புரிதல்

கல்வியில் வாதம் செய்தல் நம் நாட்டுப் பள்ளிக்கூடங்களில் இருந்தது. மிகச் சிறந்த நூற்பயிற்சியுடையவர்கள் அரசவைகளில் வாதுபுரிந்து தம் கல்வித்திறமையை நிலைநாட்டுவர். அதன் பொருட்டு அவர்கள் கொடிகட்டியிருப்பரென்று மதுரைக்காஞ்சி முதலிய நூல்களால் அறிகிறோம். இந்த வாதம்புரியும் பழக்கம் பாடசாலைகளிலிருந்தே வளர்ச்சியுற்று வந்தது. பள்ளிக்கூடத்தில் மாணாக்கன் நூல்பயிலும் இயல்பை விளக்க வந்த பழைய சூத்திரமொன்று பலவற்றைச் சொல்லிவிட்டு,

"வினாதல் வினாயவை விடுத்தல் என்றிவை கடனாக் கொளினே மடநனி இகக்கும்"

\- நன்னூல்

என்று முடிக்கின்றது. ஆட்சேப சமாதானங்கள் சொல்லிப் பழகிய பழக்கங்களே முதிர்ந்த நிலையில் வாதங்களாக வளர்ச்சியுறுகின்றன.

## சாந்துணையும் கற்றல்

பல நூல்களையும் பள்ளிக்கூடத்தில் பயின்றதோடு நில்லாமல் வாழ்நாள் முழுதும் நம் நாட்டார் படித்து வந்தார்கள். 'என் ஒருவன் சாந்துணையும் கல்லாத வாறு!' என்ற குறளினால் திருவள்ளுவர், ஒருவன் இறக்குமளவும் படிக்கவேண்டுமென்பதை விதிக்கின்றார். பள்ளிக்கூடத்திலிருந்து கற்கும் காலம் கடந்த பின்னர், பழைய காலத்தவர்கள் பின்பும் எங்கெங்கே கலைகளைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் இருந்தார்களோ, அங்கங்கே சென்று அவர்களிடம் தாம் முன்பு கல்லாதவற்றைக் கற்று வந்தார்கள்.

- மாணாக்கர்களுள் பழையவர்கள் புதியவர்களுக்குக் கற்பிப்பது பள்ளிக்கூட வழக்கங்களில் ஒன்றாகும்.
- ஒவ்வொரு நாளும் பாடங்கள் முடிந்தவுடன் பிள்ளைகளை வீட்டுக்கு அனுப்பும்போது அவர்களது ஞாபகசக்தியை விருத்தி செய்விப்பதற்காக ஒவ்வொருவருக்கும் பூ, மிருகம், பட்சி, ஊர் இவற்றின் பெயர்களில் வகைக்கு ஒவ்வொன்றை உபாத்தியாயர் சொல்லி அனுப்புவார். அந்தப் பெயர்களை மறுநாள் மறவாமல் வந்து சொல்ல வேண்டும்.
- பள்ளிக்கூடத்திற்குக் காலையில் ஐந்து மணிக்கே வந்துவிட வேண்டுமாகையால், பிள்ளைகள் பெரியவர்களை அழைத்து வருவதே வழக்கம்.

- முதலில் வருபவனை வேத்தான் என்று சொல்வார்கள். மற்றவர்களை விட வேறான தனிப்பெருமை உடையவன் என்பது அதன் பொருள்.
- பிள்ளைகளுக்கு மணல்தான் சிலேட்டின் நிலையிலிருந்தது. பனையேடுதான் புத்தகம். எழுத்தாணியே பேனா

### ஓதற்பிரிவு

இல்லறம் நடத்துங் காலத்திற்கூட வேற்று நாட்டுக்குச் சென்று அங்கங்கே உள்ளாருக்குத் தம்முடைய கல்வியைக் கற்பித்தும் வாதம்புரிந்து வென்றும் தாம் முன்பு அறியாதவற்றைக் கற்றும் வந்தார்கள். தொல்காப்பியமென்னும் பழைய இலக்கண நூலிலும் பிறவற்றிலும் இங்ஙனம் பிரியுங்காலம் ஓதற் பிரிவென்று சொல்லப்பட்டிருக்கின்றது. இதற்கு மூன்று வருஷம் காலம் எல்லையென்று அந்நூல்கள் விதிக்கின்றன.

இவ்வாறே தமிழ்நாட்டிற்கும் நவத்தீபம் முதலிய இடங்களிலிருந்து வந்து படித்துச் சென்ற பண்டிதர்கள் பலர். தஞ்சாவூரில் இருந்த ஆகம சாஸ்திர பண்டிதராகிய சர்வசிவ பண்டிதர் என்பவரிடத்தில் பல அன்னிய தேசத்து மாணாக்கர்கள் வந்து கற்றுச் சென்றார்களென்னும் செய்தியொன்று, முதல் இராஜராஜ சோழன் காலத்தில், தஞ்சையிற் பொறிக்கப்பட்ட சாசனம் ஒன்றால் தெரிகிறது. திருவாவடுதுறை மடம், தருமபுரம் மடம் முதலியன பல வருஷகாலம் தமிழ்க் கல்லூரியாகவும், வடமொழிக் கல்லூரியாகவும் விளங்கி வந்தன.

இப்படியே பாலர்களுக்குரிய பள்ளிக்கூடங்கள் முதல் பழுத்த கிழவர்கள் இருந்து கற்கும் பள்ளிக்கூடங்கள் வரையிற் பல பாடசாலைகள் தமிழ்நாட்டில் இருந்து வந்தன. தமிழ்ச் சங்கமென்று சொல்லப்படுவனவும் ஒருவகை ஆராய்ச்சிப் பள்ளிக்கூடங்களே அல்லவா?

### பின்னுரை

காலத்தின் வேகம் அந்தப் பழைய காலத்துப் பள்ளிக்கூடங்களை மாற்றியமைத்து விட்டாலும், அவற்றால் உண்டான நற்பயன்களையும் அவற்றில் படித்த பேரறிஞர்கள் நமக்கு ஈட்டி வைத்துள்ள நூற்செல்வத்தையும் நினைக்கும்போது, நம்மையறியாமல் நமக்கு ஒரு பெருமிதம் உண்டாகின்றது. அக்காலத்து முறைகளே மீளாவிடினும், அப்பள்ளிக்கூடங்களின் அடிப்படையான உண்மைகளையேனும் நாம் அறிந்துகொண்டு வாழ முயலுவோமாக!

| | |
|---|---|
| வித்தியாரம்பம் | கல்வித் தொடக்கம் |
| வித்தியாப்பியாசம் | கல்விப் பயிற்சி |
| உபாத்தியாயர் | ஆசிரியர் |
| அக்ஷராப்பியாசம் | எழுத்துப் பயிற்சி |
| கீழ்வாயிலக்கம் | பின்ன எண்ணின் கீழ்த்தொகை |
| மேல்வாயிலக்கம் | பின்ன எண்ணின் மேல்தொகை |
| குழிமாற்று | பெருக்கல் வாய்பாடு |
| சீதாள பத்திரம் | தாழை மடல் |
| நவத்வீபம் | வங்காளத்திலுள்ள ஓர் ஊர் |
| சட்டாம்பிள்ளை | பள்ளிக்கூட வகுப்பில் தலைமை வகிக்கும் மாணவர் |

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

சரியானவற்றைப் பொருத்துக (CCSE4GT/2024)

அ) அக்ஷராப்பியாசம் — 1. தாழை மடல்
ஆ) வித்தியாப்பியாசம் — 2. கல்விப் பயிற்சி
இ) வித்தியாரம்பம் — 3. எழுத்துப் பயிற்சி
ஈ) சீதாள பத்திரம் — 4. கல்வித் தொடக்கம்

| | அ) | ஆ) | இ) | ஈ) |
|---|---|---|---|---|
| அ) | 2 | 3 | 1 | 4 |
| ஆ) | 1 | 3 | 4 | 2 |
| இ) | 4 | 1 | 3 | 2 |
| ஈ) | 3 | 2 | 4 | 1 |

உ) விடை தெரியவில்லை

முதன்முதலில் ஐந்தாம் பிராயத்தில் வித்தியாப்பியாசம் செய்யும் பொழுது தாய் தந்தையர் பிள்ளைகளை ஆசிரியர்களிடம் அடைக்கலமாகக் கொடுத்து வந்தனர் -உ.வே.சா.
மேற்கண்ட வரியில் 'வித்தியாப்பியாசம்' என்பது (GTGS-2022)

அ) கல்வித் தொடக்கம் ஆ) எழுத்துப் பயிற்சி
இ) கல்விப் பயிற்சி ஈ) மனனப் பயிற்சி
உ) விடை தெரியவில்லை

## புத்தகப் பயிற்சி வினாக்கள்

சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க
அ) வசம்பு ஆ) மணத்தக்காளியிலைச் சாறு
இ) கடுக்காய் ஈ) மாவிலைக்கரி

விடை : இ)

'குழிமாற்று' எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்?
அ) இலக்கியம் ஆ) கணிதம்
இ) புவியியல் ஈ) வேளாண்மை

விடை : ஆ)

# தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்

1901 ஆம் ஆண்டு பிறந்த தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் சென்னை கோவிந்தர் இடைநிலைப் பள்ளி, பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி, சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளி ஆகியவற்றில் கல்வி கற்றார். பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்து 1920-ஆம் ஆண்டு பி.ஏ.பட்டம் பெற்றார். சட்டக்கல்லூரி மாணவராகிய இவர் 1922-இல் பி.எல்.பட்டம் பெற்றார். 1923-இல் எம்.ஏ பட்டம் பெற்றதுடன் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராகவும் ஆனார்.

வரலாறு, பொருளாதாரம் போன்றவற்றை நன்கு கற்றதுடன் பட்டங்களும் பெற்றார். தமிழ் வித்துவான், பி.ஓ.எல் ஆகிய தேர்வுகளிலும் வெற்றி பெற்று முதனிலையில் திகழ்ந்தார். சைவ சிந்தாந்தத்தை மறைமலையடிகளிடம் அறிந்து கொண்டார்.

சென்னைத் தமிழ்ச் சங்கத்தை நிறுவினார். கால்டுவெல்லின் ஒப்பிலக்கணத்தைக் கற்று 'அடிச்சொற்கள்' போன்ற நூல்களை எழுதினார். பிளாக் மேற்பார்வையில் 'தமிழ் ஒலிகள்' பற்றி ஆங்கிலத்தில் ஆய்வோடு அளித்து எம்.ஓ.எல்.பட்டமும் பெற்றார்.

1924-ஆம் ஆண்டில் சென்னை நகராண்மைக் கழக உறுப்பினராகத் தொண்டு புரிந்தார். 1936-ஆம் ஆண்டு முதல் அதன் சிறப்பு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்று 1941 வரை செயல் புரிந்தார். 1936-இல் சென்னை நகரில் பாதாள சாக்கடை அமைக்கத் தம் பகுதி மக்களிடையே பொருள் திரட்டி அத்திட்டத்தை முடித்தார். சென்னை அலுமினியத் தொழிலாளர் சங்கத் தலைவராக 1925 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார். 1935-இல் தேசிய ஆயுள் காப்பீட்டுக் கழக இயக்குநர்களில் ஒருவரானார்.

1927- இல் சென்னையில் நடந்த காங்கிரசு மகாசபை நடந்தபோது தொண்டர்படைத் தலைவரானார். 1941-ஆம் ஆண்டு தனிநபர் சத்தியாகக்கிரகத்தில் ஈடுபட்டுச் சிறை புகுந்தார்.

இவர் தம் தமிழ்ப் புலமையையும் பல்துறை அறிவுத் திறனையும் கண்ட இராஜா. சர்.அண்ணாமலை தம் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் தலைவராக அமர்த்தினார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் திராவிட மொழியியல் உயராய்வு மையத்தின் இயக்குநராகப் பணியாற்றினார். மதுரையில் 1965-இல் புதிதாகத் தொடங்கிய மதுரைப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தர் ஆனார். 'தமிழ் இலக்கணத்தில் அயல்மொழிக் கூறுகள்' என்ற தலைப்பில் சிறந்த ஆராய்ச்சி நூலை வெளியிட்டார். தமிழ் வளர்ச்சிக் கழகம் தொடங்கிய கலைக் களஞ்சியப் பணிகளில் பல நிலைகளில் இவர் உதவினார்.

சைவ சமயமடங்கள் பல இவர்க்குப் பல பட்டங்கள் சூட்டி மகிழ்ந்தன. தருமபுரமடம் 'பல்கலைச் செல்வர்' எனவும், திருவண்ணாமலை மடம் 'பன்மொழிப் புலவர்' எனவும், மேலைச் சிவபுரி சன்மார்க்க சபை 'பெருந்தமிழ் மணி' எனவும் பட்டம் நல்கின. மதுரைப் பல்கலைக்கழகமும், இலங்கைப் பல்கலைக் கழகமும், அண்ணாமலைப் பல்கலைக்கழகமும் டி.லிட் பட்டம் அளித்தன. இந்திய அரசின் 'பத்மபூஷண்' பட்டமும் தமிழக அரசின் 'தலைமாமணி' பட்டமும் பெற்றார். சாகித்திய அகாதெமி இவரை 'பெலோஷிப்' என்னும் சிறப்பு உறுப்பினர் தகுதி கொடுத்துச் சிறப்பித்தது.

இவர் எழுதிய 'பிறந்தது எப்படியோ?' என்ற நூலுக்குத் தமிழக அரசின் பரிசும் (1952) தமிழ் உரைநடைக்கெனச் சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கப் பாராட்டும் (1960) பெற்றார். 1980 அன்று மதுரையில் இறந்தார்.

## தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் இயற்றிய நூல்

- வள்ளுவரும் மகளிரும்
- அன்புமுடி (எறிபத்த நாயனார் சரித்திரம்)
- மனோதத்துவ சாத்திரம்
- தமிழா, நினைத்துப்பார்
- வள்ளுவர் கண்ட நாடும் காமமும்
- சம்பந்தரும் சமணரும்
- கவிஞர் இரவீந்திரநாத தாகூர்
- கானல் வரி
- சமணத் தமிழ் இலக்கிய வரலாறு
- பாட்டிலே பாட்சி
- நாடகக் காப்பியங்கள்
- தமிழும் பிறபண்பாடும்
- வாழும் கலை
- மொழியியல் விளையாட்டுகள்
- உலக நாகரிகத்தில் தமிழரின் பங்கு
- அன்னீத நாடகம் (பதிப்பு)

### கானல் வரி

தெ.பொ.மீனாட்சி சுந்தரனாரின் 'கானல் வரி' புது வகையான ஆராய்ச்சி நூல். சிலப்பதிகாரம் என்னும் காப்பியத்தைக் 'கானல் வரி' என்னும் பகுதியை மையமாய் இயக்கிச் செல்வது என்னும் தம் கொள்கையை அதில் நிலைநாட்டுகிறார்.

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்னும் மிகப் பழைய தொகை நூல்களின் பாடல்களைப்பற்றி ஆராய்ந்து ஆழ்ந்த நுட்பங்களையும் நயமான கருத்துகளையும் விளக்கி நூல்களை எழுதியவர்களுள் ஒருவர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்.

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

சிலப்பதிகாரத்தில் கூறப்படும் 'வரியும் குரவையும் நாட்டுப்புறப்பாடல்களே' எனக் கூறிய தமிழறிஞர் (AJGST-2019)

அ) இராமலிங்கனார்
ஆ) தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்
இ) மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார்
ஈ) மு.சண்முகனார்
உ) விடை தெரியவில்லை

கூற்று (உ) : தெ.பொ.மீனாட்சி சுந்தரனாரின் 'கானல் வரி' புதுவகையான ஆராய்ச்சி நூல். GTGS-2022

காரணம் (கா) : சிலப்பதிகார காப்பியத்தைத் கானல் வரி என்னும் பகுதியை மையமாக இயக்கிச் செல்வது என்னும் கொள்கையை இதன் மூலம் நிலைநாட்டினார்.

அ) இரண்டும் சரி
ஆ) இரண்டும் தவறு
இ) உறுதிக் கூற்று சரி, காரணம் தவறு
ஈ) உறுதிக் கூற்று தவறு, காரணம் சரி
உ) விடை தெரியவில்லை

## சி.இலக்குவனார்

இன்றைய நாகப்பட்டினம் மாவட்டம், வாய்மேடு என்னும் ஊரில் கீழக்காடு என்னும் பகுதியில் சிங்காரவேலர் -இரத்தினத்தாச்சி இணையர்க்கு மகனாக 1909 ஆம் ஆண்டு பிறந்தார்.

சாமி.சிதம்பரனார் வழிகாட்டுதலால், "இலட்சுமணன்" என்று பெற்றோர் வைத்திருந்த பெயரைத் தமிழ்ப்படுத்தி 'இலக்குவன்' என மாற்றிக்கொண்டார்.

திருவையாறு அரசர் கல்லூரியில் திருவள்ளுவர் மாணவர் கழகத்தின் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். புலவர் பட்டம் பெற்று, அதற்குரிய ஆசிரியப் பயிற்சியும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பெற்ற இலக்குவனார், தஞ்சாவூர் நாட்டாண்மைக் கழக உயர்நிலைப்பள்ளிகளில் தமிழாசிரியராகப் பணியமர்த்தம் பெற்றார். குடவாசல், திருவாரூர், நன்னிலம் முதலான ஊர்களில் அவர் சிறப்பாகப் பணியாற்றினார். தமிழ்நாட்டில் உள்ள கல்வி நிறுவனங்களில் முதன்முதலாகத் "தொல்காப்பியர் திருநாள்" கொண்டாடினார்.

"தமிழ் மொழியின் தோற்றமும் வளர்ச்சியும்" (Origin and Growth of Tamil Language) என்னும் தலைப்பில் (ஆங்கிலத்தில்) ஆய்வேடு வழங்கி எம்.ஓ.எல். பட்டம் பெற்றார். 'தமிழ்ச் சொற்கள் பற்றிய ஒரு சிற்றாய்வு' என்னும் நூலும் 'தமிழ்மொழியின் இலக்கண உருவாக்கம்' (A Brief study of Tamil Words) (The Making of Tamil Grammer) என்னும் நூலும் எழுதி வெளியிட்டார்.

கல்லூரிப் பேராசிரியர்கள் சார்பாகச் சென்னைப் பல்கலைக்கழகத்தின் கல்விக்குழுவின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தஞ்சாவூரில் ஓர் அச்சகத்தை நிறுவி 'திராவிடக் கூட்டரசு' என்று தமிழிலும் 'DRAVIDIAN FEDERATION' என்று ஆங்கிலத்திலும் இதழ்களை நடத்தினார். 'பெரியார் தனிப்பயிற்சிக் கல்லூரி' என்னும் ஒரு தனிப்பயிற்சி கல்லூரியையும் நடத்தினார்.

இலக்குவனாரின் நூல்களை வெளியிடுவதற்காகவே வள்ளுவர் பதிப்பகம் என்னும் நிறுவனம் உருவாக்கப்பட்டது. துரத்தப்பட்டேன், திருக்குறள்-எளிய பொழிப்புரை, எல்லோரும் இந்நாட்டரசர், தொல்காப்பிய ஆராய்ச்சி, பழந்தமிழ், இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல் முதலிய நூல்கள் இப்பதிப்பகத்தின் வாயிலாகவே வெளியிடப்பட்டன.

சென்னைப் பல்கலைக்கழக ஆசிரியர் குழுவின் துணைத் தலைவராகவும் தமிழகப் புலவர் குழுவின் செயலாளராகவும் செயலாற்றினார். 'தமிழ்க் காப்புக் கழகம்' என்றொரு தமிழியக்க அமைப்பை நிறுவினார். குறள்நெறி அச்சகம் நிறுவி 'குறள்நெறி' எனத் தமிழிலும் 'KURAL NERI' என்று ஆங்கிலத்திலும் திங்களிருமுறை இதழ்களை நடத்தினார். மேலும் 'சங்க இலக்கியம்', 'இலக்கியம்' எனும் இதழ்களை நடத்தினார். 1973- ஆம் ஆண்டு உயிர்நீத்தார்.

இலக்குவனார் 1933 இல் 'எழிலரசி அல்லது காதலின் வெற்றி' என்னும் தமது குறுங்காப்பியத்தை வெளியிட்டார்.

தமிழகப் புலவர் குழுவின் நிறுவனர் கி.ஆ.பெ.விசுவநாதம் இலக்குவனாரின் தனித்தன்மையைக் குறிப்பிடுங்காலை, "தமிழாசிரியர்களில் அவர் தப்பிப் பிறந்தவர் எனலாம். காரணம், அவர் தமிழால் வாழாமல் தமிழுக்காகவே வாழ்ந்து தமிழுக்காகவே சிறையும் சென்றவர் என்பதே" என்று வியந்துரைப்பார்.

இலக்குவனார் "தாய்மொழியாகிய தமிழின் வாயிலாகவே பல்கலைக்கழகக் கல்வி அமைய வேண்டும் என்பதில் தணியாத வேட்கை கொண்டவர்" என்று டாக்டர் மு.வரதராசனார் குறிப்பிட்டுள்ளார்.

### இலக்குவனார் இயற்றிய நூல்கள்

கவிதை

- எழிலரசி
- துரத்தப்பட்டேன்
- மாணவர் ஆற்றுப்படை
- அறிஞர் அண்ணாவிற்குப் பாவியல் வாழ்த்து

### ஆய்வுநூல்கள்

- தமிழ்க் கற்பிக்கும் முறை
- நமக்கு வேண்டுவன
- அமைச்சர் யார்?
- எல்லோரும் இந்நாட்டரசர்
- தொல்காப்பிய ஆராய்ச்சி
- பழந்தமிழ்
- இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல்
- வள்ளுவர் வகுத்த அரசியல்
- வள்ளுவர் கண்ட இல்லறம் அல்லது காதல் வாழ்க்கை
- சங்க இலக்கியச் சொல்லோவியங்கள்

### வரலாறு

- கருமவீரர் காமராசர்
- என் வாழ்க்கைப்போர் (இளமைப்பருவம்)

### உரை

- திருக்குறள் - எளிய பொழிப்புரை
- தொல்காப்பிய விளக்கம்
- சிவஞானசித்தியார் உரை
- சங்கப்புலவர் மாமூலனாரின் முப்பது பாடல்களுக்கும் உரை

### இலக்குவனார் வெளியிட்டு நடத்திய இதழ்கள்

- சங்க இலக்கியம்
- இலக்கியம்
- திராவிடக்கூட்டரசு

- குறள்நெறி
- Dravidian Federation
- Kural Neri
- Fortnightly

ஏற்ற பொறுப்புகள்

- சென்னைப் பல்கலைக்கழகப் பாடத்திட்டக் குழு உறுப்பினர்
- சென்னைப் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்
- சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர்
- மதுரைப் பல்கலைக்கழகப் பாடத்திட்டக் குழு உறுப்பினர்
- அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பாடத்திட்டக் குழு உறுப்பினர்
- ஐதராபாது உசுமானியாப் பல்கலைக்கழகப் பாடத்திட்டக் குழு உறுப்பினர்
- தமிழ்நாடு பல்கலைக்கழக ஆசிரியர் பேரவைத் துணைத் தலைவர்
- தமிழகப் புலவர் குழு செயலாளர்
- தமிழ்க்காப்புக்கழக நிறுவுநர் - தலைவர்
- இரண்டாவது உலகத் தமிழ்மாநாட்டுச் செயற்குழு உறுப்பினர்

**TNPSC Old Questions**
**பொதுத்தமிழ்**

'தமிழ்மொழி தோற்றமும் வளர்ச்சியும்' என்ற ஆங்கிலக் கட்டுரை எழுதியவர் (EO3GS-2022)

அ) பரிதிமாற்கலைஞர் ஆ) **சி.இலக்குவனார்**
இ) ஆறுமுக நாவலர் ஈ) வையாபுரி
உ) விடை தெரியவில்லை

"DRAVIDIAN FEDERATION" என்னும் ஆங்கில இதழை நடத்திய தமிழறிஞர் (EOGT-2013)

அ) **சி. இலக்குவனார்** ஆ) ஜே.எம். நல்லசாமி
இ) மறைமலையடிகள் ஈ) திரு.வி.க